**E.A No.. 1/2024**
**in**
**EP.No. 10/2023**
**தேதி. 28.07.2025**

**உத்தரவு பகரப்பட்டது.**

மனுதாரர்/மனுதாரர் இம்மனுவை பிரிவு 151 உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டத்தின் கீழ் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள 3 சொத்துக்களையும், விற்பனை செய்ய உத்தரவிட கோரி தாக்கல் செய்துள்ளார்.

2) எதிர்மனுதாரர் தரப்பிற்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. எதிருரை தாக்கல் செய்யப்பட்டது.

3) இருதரப்பும் கேட்கப்பட்டது, வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

4) மனுதாரர் அசல்வ ழக்கின் வாதி. எதிர்மனுதாரரிரிடமிருந்து பணத்தை திரும்ப பெற அ.வ.எண்.90/2015 தாக்கல் செய்து அவ்வழக்கில் 23.06.2020ம் தேதி பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை படி எதிர்மனுதாரர் மனுதாரருக்கு ரூ.8,76,480/−ஐ அசல் ரூ.5,28,000/−க்கு 24.04.2015ம் தேதி முதல் 9சதவீத வட்டியுடனும் 23.06.2020ம் தேதியிலிருந்து பணத்தை திரும்ப செலுத்தும் வரை 6 வதவீத வட்டியுடனும், திரும்ப பெற உரிமையுடையவர் என தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

5) தொகையை வசூலிக்க மனுதாரர் தாக்கல் செய்த நிறைவேற்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள 3 சொத்துக்களில் 1வது இனச்சொத்தில் 7 செண்ட் சொத்தினை மட்டும் விற்பனை செய்தால் போதும் என இந்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்நிலையில் 1வது இனச்சொத்தில் 7 செண்ட் சொத்தினை பிரிக்க முடியாததும் அதில் வீடு உள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.
6) 1வது இனச்சொத்தில் வீடு இருப்பதால் 14.756 சொத்தினை பிரிக்க இயலவில்லை என மனுதாரர் காரணம் குறிப்பிட்டுள்ள நிலையில் எதிர்மனுதாரர் தரப்பில் 7 செண்ட் சொத்தினை உரிய வழிப்பாதையுடன் பிரிக்க முடியும் என மனு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. மாறாக 3 அயிட்டச்சொத்துக்களை விற்பனை செய்ய ஆட்சேபனை மட்டும் தெரிவிக்கப்பட்டது.

7) பொதுவாக, நிறைவேற்றுமனு நடவடிக்கைகளில் தீர்ப்பாணை பெறுனருக்கு கிடைக்கக்கூடிய தொகைக்கு ஏற்றவாறு சொத்துக்களை விற்பனை செய்தால் போதும் என்பது தான் தீர்வு செய்யப்பட்ட சட்டநிலைப்பாடு ஆகும். ஆனால், இம்மனுவில் 1வது இனச்சொத்தில் 7 செண்ட் சொத்தை தனியாக பிரிக்கமுடியாத நிலை உள்ளது.மேலும், 7 செண்ட் சொத்தினை உரியவாறு பிரிக்க முடியும் என்று எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித வரைபடமும், தாக்கல் செய்யப்படவில்லை. தீர்ப்பாணை பெறுனருக்கு சொத்தினை விற்பனை செய்து பணத்தை செலுத்தி வைக்க வேண்டியது நீதிமன்றத்தின் கடைமையாகும்.

8) மனுதாரருக்கு சேரவேண்டிய தொகை ரூ.9.00,000/–கும் உட்பட்டே உள்ளது. இந்நிலையில் 3 அயிட்டச் சொத்துக்களையும், விற்பனை செய்வதற்கு பதிலாக 1வதுஅயிட்டச் சொத்து முழுவதையும், விற்பனை செய்ய உத்தரவிட்டால் போதும் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக 1வது இனச்சொத்தில் 7 செண்ட் என்பதற்கு பதிலாக 1வது அயிட்டச் சொத்து முழுவதையும் விற்பனை செய்ய அனுமதி வழங்கலாமென இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக இம்மனு அனுமதிக்கப்படுகிறது. 1வது அயிட்டச் சொத்து முழுவதையும் விற்பனை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.

சார்பு நீதிபதி,
பத்மனாபபுரம்.